2009 ஜூலை 2]

அமைச்சர் அவர்கள், பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியில் தங்கும் அறைகள் கட்டுவதற்கும், விசைப் படகுகளை வாங்குவதற்கும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் பகுதியில் இந்தத் துறையின் சார்பாக ஏற்கெனவே படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட தேவையைக் கருத்தில்கொண்டு அதிகப்படுத்த வேண்டிய தேவை இருந்தால் நிச்சயமாக அதிகப்படுத்தித் தருவதற்கு இந்தத் துறை தயாராக இருக்கிறது. அதே நேரத்தில் அங்குள்ள விடுதியைப் பொறுத்தமட்டில், தொடர்ந்து இந்தத் துறையே பராமரித்து வந்தது. இப்போது அதை வனத் துறைக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தாலும், மைய அரசின் வன அமைச்சகத்தின் அனுமதி கிடைக்காததாலும்,. அது அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு இத்துறை விடுதியை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

76—

நியாய விலைக் கடை பொருட்கள்

***27223—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஏழை

மக்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. திடீர் சோதனைகள், கூட்டுத் தணிக்கைகள், வாகனத் தணிக்கைகள், இரவு ரோந்து ஆகியவை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள்மீது, 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் E.C. Act— பிரகாரம், மற்றும் 1980 ஆம் ஆண்டு—B.M. Act—கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வாகனங்கள் மற்றும் கடத்தப்படுகின்ற இன்றியமையாப் பொருட்கள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்து அவற்றை அரசுக்கு ஆதாயமாக்கியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

முற்பகல் 10-15

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தாலும், கடத்தப்படக்கூடிய நியாய விலைப் பொருட்கள் கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வின்போது ஈரோடு, கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உணவுத் துணைக் கண்காணிப்பாளருக்குப் பதிலாக கண்காணிப்பாளர் நியமிக்கலாம் என்று கருத்து கூறினார்கள். அது என்ன நிலைமையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், 20 கிலோ அரிசி வழங்குவதில், முதல் கட்டமாக வழங்கக்கூடிய 10 கிலோ போக, மீதி இரண்டாவதாக வழங்கக்கூடிய அரிசி, முழுவதும் கடத்தப்படுவதாக அறிகிறோம். மேலும், இன்று மணலும் சரி, அதேபோன்று அரிசியும் சரி, தொடர்ந்து கோவை மாவட்டப் பகுதிகளில் கடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்கு மக்களோடு சேர்ந்து, மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் பேரூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, கரூர் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களோடு சேர்ந்து அந்த வாகனங்களைப் பிடித்துக் கொடுத்தால் சரியான நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்லாமல் அவர்கள்மீதே வழக்குத் தொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கக்கூடிய நிலையில், அரசு பார்த்து நடவடிக்கை

2009 ஜூலை 2]

எடுக்க வேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக எடுக்க முடியும். அப்படி எடுக்க முடியவில்லையென்று சொன்னால், கடத்தலைத் தடுக்க முடியவில்லையென்று சொன்னால் கேரளாவிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் இருக்கிற தீவிரவாதம் தமிழகத்திற்கு வருகின்றபோது அதை அரசு எப்படித் தடுக்க முடியும் என்பதுதான் எங்களுடைய கேள்வி. அதுமட்டுமல்லாமல், அந்தந்தப் பகுதியில் நமது check-posts இருக்கின்றன. அடுத்த மாநிலத்திலும் check-posts இருக்கின்றன. இங்கிருந்து வாகனங்கள் எங்கெங்கு செல்கின்றன; அதேபோன்று அடுத்த மாநிலத்தில் இருக்கின்ற check-post-ல் எத்தனை வாகனங்கள் சென்றிருக்கின்றன என்பதை cross check செய்தால்கூட, உடனடியாக எந்தெந்த வாகனத்தில் கடத்தப்பட்டிருக்கின்றன என்பதை மணலும் சரி, அதேபோன்று உணவுப் பொருட்களும் சரி, கடத்தப்படுவது தடுக்கப்படும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விநியோகத் திட்டக் கடைகளிலே 20 கிலோ அரிசி, 10 கிலோ அரிசி என்று கொடுக்கப்படுகிறது. 10 கிலோ அரிசி கடத்தப்படுகிறதா என்கிற ஒரு ஐயப்பாட்டை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். பொதுவாக நியாய விலைக் கடைகளிலே அந்தக் கடைக்கு வேண்டிய மொத்த அரிசியையும் கொண்டு வைக்க முடியாது. அவ்வளவு பெரிய குடோன்கள் எல்லாம் இருக்காது, எங்கும் பொது விநியோகக் கடைகளிலே. அதனால் முதற்கட்டமாக 60 சதவிகிதம் அட்வான்ஸ் என்கிற அடிப்படையிலே அனுப்பப்படுகிறது. அதை முதலிலே வழங்குகிறார்கள். அடுத்தபடியாக 40 சதவிகிதத்தை அந்தக் கடைகளுக்கு எவ்வளவு நுகர்வு இருக்கிறதோ அந்த அளவுக்கு இரண்டாவது முறையாக நாம் அனுப்புகிறோம். ஆக, அப்படி அனுப்புகிறபோது சில விற்பனையாளர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து இந்த ஆண்டிலே 29 விற்பனையாளர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், பொதுவாக 20 கிலோ அரிசி கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய திட்டம். அப்படித்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சில விற்பனையாளர்கள் இரண்டாவதாக வருகிற அந்த 40 சதவிகித அரிசியைக் கொடுக்காத காரணத்தினால், அது,

அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒழுங்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் நம்முடைய கோயம்புத்தூர் போன்ற பகுதிகளிலே இதுபோன்று பிற மாநிலங்களுக்குக் கடத்தப்படுகிறது என்பதை முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்ன காரணத்தினால்தான், ரோந்துப் பணி என்பதைப் புதியதாக இந்த அரசு கொண்டு வந்தது. Border Districts கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, வேலூர் போன்ற அண்டை மாநிலங்களுக்கு அருகிலே இருக்கின்ற Border Districts-லே ரோந்துப் பணிகள், இரவு நேரத்தில் கட்டாயம் மேற்கொள்ள வேண்டுமென்று அதற்கென்று தனியாகக் காவல் துறையை அனுப்பி அவர்களுக்கு guns எல்லாம் கொடுத்து அதையும் செய்து கொண்டிருக்கிறோம். கடுமையான நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான் சென்ற ஆண்டு 4,060 cases பதிவு செய்யப்பட்டன. அவ்வாறு பதிவு செய்யப்பட்டதோடு மட்டுமல்ல; சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்ட case-களில் அவர்களைக் கைது செய்தோம்; சில பேர் நீதிமன்றத்திற்குச் சென்று bail வாங்கி விடுகிறார்கள். இருந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுத்து அதன்மூலமாக சென்ற ஆண்டு 135 பேர் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல; இந்த அரசைப் பொறுத்த அளவுக்கு, பாராமுகமாக இருந்துவிடக்கூடாது; இதிலே கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான், ஏற்கெனவே அரிசி கடத்துகிறார்கள் என்று சொன்னால், அரிசியை cease செய்வார்கள்; அல்லது டிரைவர், கிளீனர் மீது மட்டுந்தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால், முதலமைச்சரினுடைய அறிவுரையை ஏற்று இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே லாரி owner யார் என்பதை அறிந்து, அந்த permit-ஐ cancel செய்கிறோம். அந்த permit வைத்துள்ள owner-ஐக் கைது செய்கிறோம். அவர்மீது வழக்குப் போடுகிறோம். இந்த அரிசி எங்கிருந்து கடத்தப்படுகிறது; பொது விநியோகக் கடையிலிருந்தா, அல்லது கொள்முதல் செய்கிற இடங்களிலிருந்து கடத்தப்படுகிறதா; அல்லது, நுகர்வோர் வாணிபக் கழகத்திலிருந்து கடத்தப்படுகிறதா என அதையும், அதனுடைய மூலத்தையும் அறிந்து அவர்களையும் கைது செய்திருக்கிறோம். அந்த வகையிலே சென்ற ஆண்டு மட்டும் 2008-லே 371 லாரி permit-ஐ இரத்து செய்யச் சொல்லி போக்குவரத்துத் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் வைத்துள்ள டிரைவர் லைசென்சைப் பொறுத்த அளவுக்கு, 208 பேர்களினுடைய டிரைவர்

2009 ஜூலை 2]

லைசென்சை இரத்து செய்யச் சொல்லி அனுப்பியிருக்கிறோம். ஆக, இந்தத் துறையைப் பொறுத்த அளவில் கடுமையாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மக்களினுடைய பிரதிநிதிகள் அதுபற்றிச் சொன்னால், எங்கள் மீதே வழக்குப் போடுகிறார்கள் என்று ஒரு தவறான செய்தியைச் சொல்கிறார். அப்படியல்ல; பொது விநியோகக் கடையைப் பொறுத்த அளவுக்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களினுடைய பிரதிநிதிகள் நேரடியாக அங்கே ஆய்வுக்குப் போகலாம். அதைக் கண்டிக்கலாம். அங்கிருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு அதைப் புகாராக அவரிடத்திலே சொல்லலாம். கட்டுப்பாட்டு அறை வைத்திருக்கிறோம். அங்கும் சொல்லலாம். அப்படிச் சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது சொல்லி நடவடிக்கை இல்லையென்று சொன்னால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், கட்டாயம் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் சர்க்கரையும், அரிசியும் வாங்கும்போது மளிகைப் பொருட்கள் வாங்கினால்தான் கொடுக்கப்படும் என்ற ஒரு நிலை இருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதற்கு நடவடிக்கை வேண்டுமென்று கேட்பதோடு, கொடுக்கக்கூடிய பொருட்களின் அளவு குறைவாக இருக்கிறது. மேலும், கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய 15 இலட்சம் குடும்ப அட்டையில் 1½ இலட்சம் குடும்ப அட்டைகள் கடந்த மாதம் இரத்து செய்யப்பட்டு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பொருட்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற அவல நிலை இருக்கின்றது.

இதற்காக ஒரு மாத காலம், கடந்த 30 ஆம் தேதிவரை, மாவட்ட ஆட்சியரிடம் மீண்டும் மனு கொடுப்பதற்காகக் கேட்டபோது, 20,000 மனுக்கள் வந்திருக்கின்றன என்று தெரிவித்தார். நாங்கள் கேட்பது, 15 இலட்சம் ரேஷன் கார்டுகளில் 1½ இலட்சம் ரேஷன் கார்டுகள் இன்று இரத்து செய்யப்பட்டு, அடித்தள ஏழை மக்களுடைய வயிற்றில் அடித்திருக்கின்ற அந்தத் தவறை யார் செய்தது? தவறாக அந்த ரேஷன் கார்டுகளை இரத்து செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, மீண்டும் நீட்டித்து அந்தக் குடும்ப அட்டைகள்

அனைவருக்கும், முறையானவர்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பளிப்பதற்காக விண்ணப்பங்களைப் பெறுவதற்கு வழி செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடும்ப அட்டைகளுள், Bogus Card-கள் உள்ளன என்று இந்தச் சட்டமன்றத்திலே பல முறை நான் சொல்லியிருக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவுக்கு முதன்முதலாக நான் அமைச்சர் பொறுப்பேற்றவுடனே, பல மாவட்டங்களுக்கு—இன்னும் சொல்லப் போனால் 30 மாவட்டங்களுக்கு—ஆய்வுக்குச் சென்றபோது, பல இடங்களிலே இதுபோன்ற Bogus Card-கள் எல்லாம் இருக்கின்றன என்று ஒரு கணக்கெடுத்து சுமார் 25 இலட்சம் கார்டுகள் Bogus Card-கள் இருக்கின்றன என்று சொன்னோம். ஒவ்வொரு மாவட்டத்திலும், இந்த Bogus Card-களை, தவறான கார்டுகளை அகற்ற வேண்டுமென்று அரசு முயற்சி செய்து, முதலாவதாக கோயம்புத்தூரையும், திருச்சியையும், சென்னையிலே அண்ணா நகரையும் தேர்ந்தெடுத்து pilot programme என்று ஒரு முன்மாதிரி programme-ஐ எடுத்தோம். அப்படி எடுக்கிறபோது, உடனே அதை நிறுத்துவது என்பதல்ல; நேரடியாக ஒவ்வொரு குடும்பத்திடமும் போகிறோம்; தலத் தணிக்கை செய்கிறோம். அதற்குப் பின்னாலே அது தவறான கார்டு என்று அறியப்பட்டால் அந்த விவரங்களைப் பொது விநியோகக் கடைகளிலே ஒட்டுகிறோம். வீட்டிலே அவர்களெல்லாம் இல்லை; அதனால், அவை தவறான கார்டுகள் என்று ஒட்டுகிறோம். 30 நாட்கள் அவகாசம் கொடுக்கிறோம். ஒவ்வொரு பொது விநியோகக் கடையிலும் அவ்வாறு ஒட்டப்பட்டது. கோயம்புத்தூரிலே எந்தக் கடைகள் என்றுகூட list என்னிடம் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினருக்காகச் சொல்வதில்லை; ஒட்டப்பட்டது. அந்த 30 நாட்களிலே அப்படி ஒட்டப்பட்டிருக்கிற பட்டியலில் உள்ளவர்கள், “நாங்கள் குடும்பமாக இருக்கிறோம்; எங்களிடம் கார்டு இருக்கிறது” என்று அங்கேயே மனு கொடுத்துவிட்டால், அந்தக் கார்டுகள் நீக்கப்படுவதில்லை. அதற்குப் பின்னாலும் சரி, 30 நாட்கள் மீண்டும் அவகாசம் தருகிறோம். அங்கே இருக்கிற தாசில்தாரிடமோ, டி.எஸ்.ஓ.-விடமோ, கலெக்டரிடமோ யாரிடம் வேண்டுமானாலும்

2009 ஜூலை 2]

நீங்கள் மனு கொடுக்கலாம். அப்புறமும் ஒரு 30 நாட்கள் அவகாசம் கொடுக்கிறோம். அதற்குப் பின்னால்தான் இவை தவறான கார்டுகள், முறையற்ற கார்டுகள் என்று நீக்கி வைக்கிறோமேயொழிய, கார்டுகளையெல்லாம் cancel பண்ணிவிட்டால், மறுபடியும் புதிய கார்டுகளை அரசாங்கம்தானே கொடுத்தாக வேண்டும்? அதனாலே ஒரு வழிமுறையைச் செய்கிறோம். ஏதாவதொரு வழிமுறையைக் கடைப்பிடித்தால்தான், தவறான கார்டுகள் களையப்படும். எனவே, நியாயமான கார்டுகளை, இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவுக்கு, இரத்து செய்ய வேண்டும் என்பது நோக்கமல்ல. அதுபோன்றிருந்தால் அவை மாவட்ட ஆட்சியரிடத்திலே சொல்லி முறைப்படுத்தப்படும். ஆக, தவறான கார்டுகள் இருந்தால் தொடர்ந்து அவற்றை நாங்கள் நீக்கித்தான் ஆக வேண்டும். அதற்கு வேறு வழியேயில்லை. அதற்கடுத்தபடியாக 10 மாவட்டங்களிலே போட்டுவிட்டோம். அதற்கடுத்து மறுபடியும் அடுத்த மாதம் 14 மாவட்டங்கள் போடுகிறோம். போட்டுத்தான் ஆகவேண்டும். அதற்கெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும். ஆனால், உண்மையான குடும்பங்களிலே இருக்கிற கார்டுகளைத் தவிர்க்க வேண்டுமென்பதல்ல இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

நூற்பாலை

***57861—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொங்கணாபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொங்கணாபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.